செ.கு.எண்: 161 3/11/2011

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிரபல திரைப்பட இசையமைப்பாளர் திரு. இளையராஜா அவர்களுக்கு 1.11.2011 அன்று எழுதிய இரங்கற் கடிதம்**

"தங்களின் அன்பு மனைவி திருமதி ஜீவா அவர்கள் நேற்று இரவு திடீரென்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடு செய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்த துயரத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் அளிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்.

அன்பு மனைவியை இழந்து வாடும் தங்களுக்கும், தங்களின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.